## நேஷன்ஸ் சேவர் கணக்குகள் - நியதிகளும் நிபந்தனைகளும்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ – PQ 118 (இதனகத்துப் பின்னர் 'வங்கி' எனக் குறிப்பீடு செய்யப்படும்) இல் திறந்து பேணப்படுகின்ற அனைத்து சேமிப்புக் கணக்குகளையும் (எவ்விதத்திலும் பெயர்குறிக்கப்படுகின்ற) பின்வரும் நியதிகளும் நிபந்தனைகளும் ஆளும்.

1. கணக்குகள், சேமிப்பு புத்தக கணக்குகளாக அல்லது கூற்று சேமிப்புக் கணக்குகளாக ஆரம்பிக்கப்படலாம்.
2. கணக்குகள், வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளத்தை உறுதிப்படுத்துகின்ற இரு ஆவணங்களைத் (உதாரணம்: தேசிய அடையாள அடடை, செல்லுபடியான கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம்) அத்துடன் தொடர்பு முகவரியினைச் சரிபார்ப்பதற்கான ஆவணமொன்றுடனும் (உதாரணம்: அண்மைய உபயோகப் பட்டியல், வங்கிக்கூற்று) தொடர்புபடுத்துவதன் மூலம் சாதகமான அடையாளப்படுத்தலின் மீது வங்கியினால் அனுமதிக்கப்பட்ட ஆளொருவரினால்/ஆட்களினால் திறக்கப்படலாம்.

3. கணக்குகள்,

   அ. தனிப்பட்ட ஒருவரினால் அவரது பெயரில் திறக்கப்படலாம்
   ஆ. பொறுப்பாணைப் படிவத்தில் தரப்படுகின்ற மீளெடுப்பு அதிகாரத்தின் மீதான தெளிவான அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டு அவர்களது உரிய பெயர்களில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டோர் இணைந்து திறக்கலாம், அல்லது
   இ. வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியொன்றின், அமைப்பொன்றின், கழகமொன்றின் அல்லது வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க அதனையொத்த நிறுவனமொன்றின் பெயரில் திறக்கப்படலாம்.
   ஈ. பராயமடையாத ஒருவரின் நலனுக்காக பெற்றோரொருவரால் அல்லது பாதுகாவலரால் திறக்கப்படலாம்.

4. ஒவ்வொரு கணக்கிற்கும் ஒரு இலக்கம் வழங்கப்படும். அது வங்கியுடனான அனைத்து தொடர்புகளிலும் அத்துடன் அனைத்து வைப்புச் சீட்டுக்கள் மற்றும் மீளெடுப்புப் படிவங்கள் மீதும் குறிப்பிடப்படப் வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்ட இலக்கத்தினை கணக்கு வைத்திருப்பவருக்கான அறிவித்தலுடன் மாற்றுவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

5. சேமிப்புக் கணக்குகளின் நோக்கத்திற்காக வங்கி, நம்பிக்கைப் பொறுப்புகளை அங்கீகரிப்பதில்லை.

6. இணைந்த கணக்கொன்றின் தரப்பினர் மரணமடைகின்றவிடத்து, உயிர்வாழ்பவர்/ உயிர்வாழ்பவர்கள், மரணத் திகதியினை வழங்கி, மரணம் பற்றி உடனடியாக வங்கிக்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய கணக்குகளின் கொடுக்கல்வாங்கல்கள், அப்போதுள்ள சட்டத்தினால் ஆளப்படும். சேமிப்புக் கணக்கொன்றினை அவரது பெயரில் ஆரம்பித்து பேணுகின்ற தனிப்பட்ட கணக்கு வைத்திருப்பவரொருவர், 27 ஆம் வாசகத்தில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்குட்பட்டு, வங்கியினால் வழங்கப்படும் பெயர்குறித்து நியமிக்கும் படிவத்தினை பூர்த்திசெய்வதன் மூலம், கணக்கு வைத்திருப்பவர் மரணிக்கின்ற சந்தர்ப்பத்தில் கணக்கிலுள்ள மீதியின் பயன்பெறுநராக(பயன்பெறுநர்களாக) ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆளை (ஆட்களை) பெயர்குறித்து நியமிக்கலாம்.

7. வங்கி, கணக்கு வைத்திருப்பவருக்கு சேமிப்பு புத்தகத்தை அல்லது காலாந்தர கணக்குகள் கூற்றை வழங்கும், இவை கணக்கு வைத்திருப்பவரினால் கவனமாக பாதுகாக்கப்பட வேண்டும்.

**சேமிப்பு புத்தகங்களுக்கு மாத்திரம்**

8. சேமிப்பு புத்தகத்தின் மீது கணக்கு வைத்திருப்பவரினால் பதிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படலாகாது என்பதுடன் கோரப்படுகின்ற போது கணக்கு வைத்திருப்பவர் சேமிப்பு

புத்தகத்தை வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும். சேமிப்பு புத்தகமானது கைமாற்றத்தகாதது அல்லது குறித்தொதுக்கப்படத்தகாதது என்பதுடன் பிணையாக வாக்குறுதியளிக்கப்பட முடியாததாகும். கணக்கு வைத்திருப்பவர், பதிவின் சரியான தன்மையினை உறுதி செய்வதற்கு ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலின் பின்னரும் சேமிப்பு புத்தகத்தை பரீட்சித்தல் வேண்டும் என்பதுடன் எவையேனும் பிழைகள் வங்கிக்கு உடனடியாக அறிவிக்கப்படல் வேண்டும். சேமிப்பு புத்தகம் தொலைகின்ற, திருடப்படுகின்ற அல்லது அழிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் கணக்கு வைத்திருப்பவர் உடனடியாக வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

9. பிந்திய பதிவுகளை இற்றைப்படுத்துவதற்காக வங்கிப் புத்தகம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் வைப்புகள் செய்யப்பட்டிருக்கலாம் அல்லது விடயங்கள் அறவிடப்பட்டு/பற்று வைக்கப்பட்டிருக்கலாம் என்பதனால் வங்கிப் புத்தகம் கணக்கின் சரியான மீதியினை குறித்துக்காட்ட வேண்டும் என்ற அவசியமில்லை.

10. வழங்கப்பட்ட சேமிப்பு புத்தகம் கிரமமாக இற்றைப்படுத்தப்படல் வேண்டும். சேமிப்பு புத்தகம் மீது இறுதியாக பதிவுசெய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் பின்னர் மூன்று மாதங்களுக்குள் சேமிப்பு புத்தகம் இற்றைப்படுத்தப்படாவிடின், கொடுக்கல்வாங்கல் விவரங்களுக்கான பிரதிகள் அல்லது அறிவுறுத்தல்கள் வங்கியிடமிருந்து அதன் பின்னதாக கோரப்படுமெனில் அச் சேவையினை வழங்குவதற்காக கட்டணம் அறவிடுவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

<u>**கூற்று சேமிப்புக் கணக்கிற்கு மாத்திரம்**</u>

11. கூற்று சுழற்சி இறுதியிலிருந்து 10 நாட்களினுள் கணக்குக் கூற்று கிடைக்கப்பெறவில்லையாயின், வங்கிக்கு அது பற்றி அறிவிக்கப்பட வேண்டும். பதிவின் சரியான தன்மையினை உறுதி செய்வதற்கு வங்கியிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற ஒவ்வொரு கூற்றையும் பரீட்சிப்பதற்கு கணக்கு வைத்திருப்பவர் உடன்படுகின்றார். எவையேனும் பிழைகள், கூற்று கிடைக்கப்பெற்றதிலிருந்து 14 நாடகளினுள் வங்கிக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

12. கணக்கு வைத்திருப்பவர் அவரது மீதிக் கூற்றுகளின் பிரதிகளை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு பொறுப்புடையவராவார். மீதிக் கூற்றுகளின் பிரதிகள் வங்கியிடமிருந்து கோரப்படுமாயின், அதன் வெளியிடப்பட்ட கட்டணங்களுக்கு அமைவாக கட்டணம் ஒன்றினை அறவிடுவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

**வைப்புகள்**

13. வங்கி மீது வரையப்படாத வரைவுகள் மற்றும் வேறு கொடுப்பனவு கட்டளைகள், கொள்வனவு செய்யப்பட அத்துடன் சேகரிப்புக்காக அனுப்பட வேண்டுமா என்பதனை வங்கி அதன் தற்றுணிபில் தீர்மானிக்கும். கொள்வனவுசெய்யப்பட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கொடுப்பனவு செய்கின்ற வங்கியினால் கொடுப்பனவு நிறைவேற்றப்படாத நிகழ்வுக்கு பின்னரும் அனைத்து கொள்வனவுசெய்யப்பட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கணக்கு வைத்திருப்பவருக்கெதிராக அறவிடுவதற்கான (கட்டணங்கள் உள்ளடங்கலாக) முழு உரிமையினையும் வங்கி கொண்டிருக்கும். கொடுப்பனவு நிறைவேற்றப்படாமை அறிவித்தல் கிடைப்பனவின் மீது கணக்கு பற்றுவைக்கப்படும்.

14. வங்கி மீது வரையப்பட்ட வரைவுகள்/காசோலைகள் கணக்கொன்றின் வரவுக்காக கொடுப்பனவு செய்யப்படுகின்ற போது, வங்கியானது அதன் வெளியிடப்பட்ட கட்டணங்களுக்கமைவாக கையாளுகின்ற கட்டணங்களை கழிக்கும். அத்தகைய வைப்புகளின் பெறுமதித் திகதியானது வங்கியில் நடைமுறையிலுள்ள கொள்கையினைச் சார்ந்து வங்கியினால் தீர்மானிக்கப்படும். சேமிப்புக் கணக்கின் வரவுக்காக வங்கி மீது வரையப்படாத வரைவுகள்/காசோலைகள் கொள்வனவு செய்யப்படுகின்ற போது, கணக்கிற்கு வரவுவைக்கும் போது சாதனத்தின் முகப்பெறுமதியிலிருந்து கையாளுகைக் கட்டணங்களுக்கு மேலதிகமாக வங்கியின் வெளியிடப்பட்ட கட்டணங்களுக்கு அமைவாக கழிவுக் கட்டணங்களையும் வங்கி கழிக்கும்.

15. சேமிப்பு புத்தக சேமிப்புக் கணக்கு வழமையாக திறக்கப்படகூடிய குறைந்தபட்ச ஆரம்ப வைப்புத் தொகை ரூ. 10,000 ஆக இருக்க வேண்டும் என்பதுடன் கூற்று சேமிப்புக் கணக்கு வழமையாக திறக்கப்படகூடிய குறைந்தபட்ச ஆரம்ப வைப்புத் தொகை ரூ. 10,000 ஆக இருக்க வேண்டும் அல்லது காலத்திற்கு காலம் வங்கியினால் நிரணயிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தொகையாகவிருக்கும். வங்கியானது அதன் ஏக தற்றுணிபில் விதிவிலக்கான சூழ்நிலைகளில் குறைவான அல்லது உயர்வான ஆரம்ப வைப்புத் தொகையுடன் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு பரிசீலனையில் கொள்ளலாம் எவ்வாறாயினும், அது நிபந்தனையில் (23) உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்குட்பட்டதாகவிருக்கும்.

16. வைப்புக்கள் விரும்பியவாறு அடிக்கடி மேற்கொள்ளப்படலாம். அனைத்து வைப்புகளும், காசாளர் முனையத்தில் சேமிப்பு புத்தகத்தில் மேற்கொள்ளப்படும் பதிவொன்றின் அல்லது வைப்புச்சீட்டின் மீது வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் கையொப்பத்தின் மூலமாக செல்லுபடியாக்குதல் மூலம் ஏற்றுக்கொள்ளப்படும். அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பங்களினதும் மாதிரி காசாளர் முனைய அச்சினதும் அட்டவணையை கோரிக்கையின் மீது பார்க்கலாம்.

17. வங்கி சார்பில், அதனைத் தொடர்ந்து பயன்பெறுனரின் பெயர் மற்றும் கணக்கிலக்கத்திற்கு வரையப்பட்ட காசோலை வைப்புகள், கிளை முகாமையாளரின் அனுமதிக்குட்பட்டு ஏற்றுக்கொள்ளப்படலாம் என்பது தவிர பண வைப்புகள் மாத்திரம் அனுமதிக்கப்படும். காசோலை வைப்புகள் அனுமதிக்கப்பட்டுள்ளவிடத்து, அவ்வாறு வைப்பிலிடப்பட்ட காசோலைகளின் பெறுகைகள் (ஏதேனும் இருப்பின்) வாடிக்கையாளரின் கணக்கிற்கு வரவுவைக்கப்பட்டாலன்றி, கிளைகளில் அமையப்பெற்றுள்ள காசோலை வைப்பிலிடல் பெட்டியில் வைப்பிலிடப்பட்டதாக கூறப்படுகின்ற (தற்காலிக குறிப்பொன்றினை சமர்ப்பித்தல் எவ்வாறிருப்பினும்) ஏதேனும் காசோலைக்காக வாடிக்கையாளருக்கு வங்கி பொறுப்புடையதாகாது. வைப்பு பெட்டியினால் வழங்கப்பட்ட தற்காலிக குறிப்பு எவ்வாறிருப்பினும், அவ்வாறு வைப்பிலிடப்பட்டதாகக் கூறப்படுகின்ற காசோலைகள் வாடிக்கையாளரின் கணக்கிற்கு வரவுவைக்கப்பட்டாலன்றி, எச்சூழ்நிலையின் கீழும் அல்லது எதுவாயினும் எக்காரணத்திற்காகவும் வங்கியானது காசோலை வைப்புப் பெட்டிகளில் வைப்பிலிடப்படுகின்ற காசோலைகள் தொடர்பில் ஏதேனும் உரிமைக்கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாது. வாடிக்கையாளரின் கணக்குகளுக்கு வரவுவைக்கப்படுகின்ற காசோலைகள், சேகரிப்புக்காக மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன், வரையும் வங்கியினால் தீர்ப்பனவு செய்யப்படும் வரை பெறுகைகள் மீளெடுப்புக்காக கிடைக்கப்பெறமாட்டாது. நிதியங்கள் கிடைக்கப்பெறுகின்ற திகதியானது குறித்துக்காட்டும் நோக்கத்திற்காக மாத்திரம் காண்பிக்கப்படுகின்றது. சேமிப்புக் கணக்குகள், காசோலைகளைச் சேகரித்தல் மற்றும் தீர்ப்பனவுகள் செய்தல் என்வற்றுக்காக உத்தேசிக்கப்பட்டவையல்ல என்பதுடன், கொண்டுவருபவருக்கு, வைப்பிலிடுபவருக்கு அல்லது மூன்றாம் தரப்பினர்களுக்கு செலுத்தப்படக்கூடியதாக வரையப்பட்ட காசோலைகள் மற்றும் பங்கிலாப ஆணைச்சீட்டுக்கள் மற்றும் ஏதேனும் வேறு சாதனங்களை வைப்பிலிடுவதற்கு ஏற்றுக்கொள்வதை நிராகரிப்பதற்கு வங்கி உரிமையினை கொண்டிருக்கும்.

**<u>மீளெடுப்புகள்</u>**

18. ஏற்புடைய விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் உட்பட்டு, தானியக்கப் பண மீளெடுப்பு இயந்திரங்கள் (ATM) ஊடாக அல்லது கிளைகளில் விரும்பியவாறு பல தடவைகள் மீளெடுப்புகள் மேற்கொள்ளப்படலாம். ATM அட்டைக் கட்டணங்களும் வேறு வங்கிகளின் ATM களில் இருந்து மீளெடுப்புக்கான கட்டணங்களும் வங்கியின் தற்போதைய வீதங்களில் கொடுப்பனவு செய்யத்தக்கதாக இருத்தல் வேண்டும். கிளைகளில் பண மீளெடுப்புகள், சாதகமான அடையாளப்படுத்தலின் மீதும் சேமிப்புப் புத்தகம் வழங்கப்பட்ட கணக்குகள் விடயத்தில், சேமிப்பு புத்தகத்தினை சமர்ப்பித்தலின் மீது 23 ஆம் நிபந்தனையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்குட்பட்டு அனுமதிக்கப்படும். வங்கியானது அதன் ஏக தற்றுணிபில் சேமிப்பு புத்தகத்தை சமர்ப்பிக்காது கிளைக் கருமபீடங்களில் பண மீளெடுப்புகளை (சேமிப்பு புத்தகமின்றி மீளெடுத்தல்) அனுமதிக்கலாம்.

வங்கியானது கிளைகளில் அத்தகைய "சேமிப்பு புத்தகமின்றி" மீளெடுத்தலுக்கு அதன் ஏக தற்றுணிபில் கட்டணமொன்றை அறிமுகப்படுத்தலாம் அல்லது அறவிடலாம். ஏற்புடையதானவிடத்து முத்திரைத் தீர்வை மற்றும் வேறு வரிகள் அத்துடன் அறவீடுகள், கணக்கு வைத்திருப்பவரினால் செலுத்தப்படத் தக்கவையாகவிருக்கும் என்பதுடன் சட்டத்திற்கு அமைவாக வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட விதத்தில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். காசோலைகளின் அல்லது ஏதேனும் வேறு சாதனத்தின் வாயிலாக சேமிப்புக் கணக்குகளிலிருந்து பண மீளெடுப்புகள் மேற்கொள்ளப்பபடலாகாது.

19. சேமிப்புக் கணக்கின் பற்றுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து நியாயமான காலத்தினுள், அஞ்சல் மூலம் கிடைக்கப்பெற்ற அல்லது வங்கியின் கிளைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட அத்தாட்சிப்படுத்தப்பட்ட (நிலையியல் உள்ளடங்கலாக) எழுத்து மூல அறிவித்தல் மீது மாத்திரம் வங்கி செயற்படும் ஆயினும் மேலே 17 ஆம் வாசகத்தில் உள்ளடக்கப்பட்ட விதித்துரைப்புகளுக்குட்பட்டு. குறித்துரைக்கப்பட்ட கால வரையறையினுள் அத்தகைய அறிவுறுத்தல்கள் மீது செயற்படுவதற்கு அது தவறுவதிலிருந்து தோன்றுகின்ற ஏதேனும் கோரிக்கைகளுக்கு, இழப்புகளுக்கு அல்லது செலவுகளுக்கு வங்கி பொறுப்புடையதாகவிராது அல்லது பொறுப்பினை ஏற்றுக்கொள்ளாது. வங்கிக்கும் கணக்கு வைத்திருப்பவருக்கும் இடையிலான குறிப்பான உடன்படிக்கையின்றி தொலைநகல், மின்னஞ்சல் அல்லது ஏதேனும் வேறு இலத்திரனியல் ஊடகம் வாயிலாக கிடைக்கப்பெறுகின்ற ஏதேனும் அறிவுறுத்தல்களை வங்கி ஏற்றுக்கொள்ளாது.

**வட்டி**

20. நாளாந்தம் கிடைக்கப் பெறுகின்ற மீதியின் மீது நடப்பு வீதத்தில் கணிக்கப்படுகின்ற வட்டி, மாதாந்தம் அத்தகைய கணக்கிற்கு வரவுவைக்கப்படும் (வழமையாக மாதத்தின் கடைசி நாளன்று). வட்டிக் கொடுப்பனவவுகள், 18, 21 மற்றும் 23 ஆம் நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்குட்பட்டதாகும்.

21. அனைத்து வாடிக்கையாளர்களும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வேண்டப்பட்டவாறு கணக்கை ஆரம்பிக்கும் படிவங்களின் மீது தமது வரி நிலைமைகள் பற்றிய அத்துடன், வதிவிட நிலைமைகள் பற்றிய நியதிச்சட்ட பிரகடனத்தை பூர்த்திசெய்ய வேண்டும். வாடிக்கையாளரினால் ஆக்கப்பட்ட நியதிச்சட்ட பிரகடனமானது அதே பொறுப்பாணை மூலம் திறக்கப்பட்டு ஆளப்படுகின்ற ஏற்கனவேயுள்ள அத்துடன் புதிய கணக்குகள் அனைத்துக்கும் ஏற்புடையதாகவிருக்கும். வட்டிக் கொடுப்பனவுகள் மீதான பிடித்துவைத்தல் வரி அல்லது ஏதேனும் வேறு செலுத்தத்தக்க வரி, காலத்திற்குக் காலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அல்லது அத்தகைய வேறு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதிக்காக அத்தகைய (வீதத்தில் அல்லது வீதங்களில்) கொடுப்பனவு செய்யத்தக்க வட்டியிலிருந்து வங்கியினால் கழிக்கப்படும். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மூலம் வங்கியிடமிருந்து பின்னதாக கோரப்பட்டிருக்குமெனில், கொடுப்பனவு செய்யப்படாத பிடித்துவைத்தல் வரிகளை வாடிக்கையாளரிடமிருந்து அறவிடுவதற்கு (ஏதேனும் அறிவித்தலின்றி) வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

**பொதுவானவை**

22. கணக்கு ரைவத்திருப்பவரின் ஏதேனும் முகவரி மாற்றம் பற்றி வங்கிக்கு எழுத்தில் உடனடியாக அறிவிக்க வேண்டும்.

23. வங்கியானது அதன் தற்றுணிபில் ஏதேனும் சேமிப்புக் கணக்கில் உள்ள மீதி ரூ, 1000 ஐ விட குறைகின்றவிடத்து கொடுக்கல்வாங்கல் கட்டணத்தை அத்துடன்/அல்லது சேவைக் கட்டணமொன்றினை அறவிடலாம் அத்துடன்/அல்லது வட்டியினை பிடித்துவைக்கலாம். வங்கியானது அதன் ஏக தற்றுணிபில் கிளைக் கருமபீட கொடுக்கலவாங்கல் அத்துடன்/அல்லது ATM கொடுக்கலவாங்கல் மீது வேறான கொடடுக்கல்வாங்கல் கட்டணங்களை அறிமுகப்படுத்தலாம். ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதியினுள் வாடிக்கையாளரினால் மூடப்படும்

கணக்குகள் மீது கையாளுகைக் கட்டணமொன்று அறவிடப்படும். நடமுறையில் ஏற்புடைய கட்டணங்களும் விதிப்பனவுகளும், வங்கியின் கட்டண ஏட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இது, கோரிக்கையின் பேரில் கிடைக்கப்பெறுகின்றது.

24. அறவிடப்படும் சேவைக் கட்டணம், நடப்பு அல்லது அடுத்த மாதத்தினுள் வாடிக்கயையாளரின் கணக்கிலிருந்து பற்றுவைக்கப்படலாம்.

25. கூற்றுகளின் பிரதிகளை அத்துடன்/அல்லது சேமிப்புக் கணக்குகளில் தோன்றுகின்ற கொடுக்கல்வாங்கல் பதிவுகளை வங்கி ஏழு வருடங்களைக் கொண்ட காலப்பகுதிக்கு மாத்திரம் வைத்திருக்கும். அனைத்து அத்தகைய பதிவுகளும் ஏழு வருடங்களின் பின்னர் அழிக்கப்படும் என்பதுடன் ஏழு வருடங்களின் பின்னர் கூற்றுகளின் அல்லது கொடுக்கல்வாங்கல் பதிவுகளின் பிரதிகளை வழங்குவதற்கு வங்கி பொறுப்பெதனையும் ஏற்காது அல்லது பொறுப்புடையதாகாது.

26. அஞ்சல் மூலம் அனுப்பப்படும் இதன்கீழான ஏதேனும் அறிவித்தலானது இறுதியாகப் பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு அஞ்சல்செய்த 7 நாட்களினுள் கணக்கு வைத்திருப்பவருக்கு கிடைக்கப்பெற்றதாகக் கருதப்படும். கடிதம் மூலம் அத்துடன்/அல்லது உள்நாட்டு பத்திரிகை அறிவித்தலில் அத்துடன்/அல்லது கிளைகளில் உள்ள அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தல் மூலம் அத்துடன்/அல்லது கூற்று செய்திகளினூடாக வழங்கப்படும் கட்டணங்களுக்கான மற்றும் அறவீடுகளுக்கான அத்துடன்/அல்லது இந்நியகளுக்கான மற்றும் நிபந்தனைகளுக்கான மாற்றங்கள் பற்றிய அறிவித்தல், கணக்கு வைத்திருப்பவருக்கு அத்தகைய அறிவித்தல் வழங்கப்படுவதாக கொள்ளப்பட வேண்டும்.

27. வங்கியின் ஏக தற்றுணிபில் அவ்வாறு செய்யப்பட்டாலன்றி, பண வைப்புகளுக்கு மற்றும் மீளெடுப்புகளுக்கு, காசோலை வைப்புகளுக்கு மற்றும் வேறு பற்றுகள்/வரவு கொடுக்கல்வாங்கல்களுக்கு அஞ்சல் மூலம் தனியான வாடிக்கையாளர் அறிவுறுத்தல்களை வங்கி அனுப்பாது.

28. வங்கியானது அறிவித்தலின்றி, உங்களது கணக்கினை/ கணக்குகளை வங்கிக்கான ஏதேனும் பொறுப்புகளுடன் ஒருங்கிணைக்கலாம் அல்லது ஒன்றுசேர்க்கலாம் என்பதுடன் அத்தகைய பொறுப்புகள், உண்மையாக அல்லது எதிர்பாராதவையாக, முதன்மையானவையாக அல்லது பிணையஉறுதியாக அத்துடன் பலதாக அல்லது இணைந்ததாக எதுவாகவிருப்பினும்சரி, ஏதேனும் அத்தகைய கணக்குகளின் வரவில் இருக்கின்ற ஏதேனும் தொகையினை/தொகைகளை அல்லது வங்கியிலிருந்து அல்லது வேறு ஏதேனும் கணக்கிலிருந்து அல்லது ஏதேனும் வேறு தொடர்பில் உங்களுக்கு உரித்தான ஏதேனும் வேறு தொகையினை/தொகைகளை எதிரீடு செய்யலாம் அல்லது மாற்றல்செய்யலாம்.

29. ஏதேனும் கணக்கை ஆரம்பிப்பதனை நிராகரிப்பதற்கு அத்துடன்/அல்லது கணக்கு வைத்திருப்பவரின் இறுதியாக பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு 7 நாள் அறிவித்தலை வழங்கியதன் பின்னர் காரணங்களை வழங்காது ஏதேனும் கணக்கினை மூடுவதற்கு வங்கி தானாக உரிமையினைக் கொண்டிருக்கும். சேமிப்பு புத்தக சேமிப்புக் கணக்கு விடயத்தில், ரூ. 1000 கொண்ட குறைந்தபட்ச மீதியுடன் கணக்கு வைத்திருப்பவரின் கணக்கை முடக்குவதற்கும் அத்துடன் கூற்று சேமிப்புக் கணக்கு விடயத்தில், ரூ. 50 குறைந்தபட்ச மீதித் தொகையுடன் கணக்கு வைத்திருப்பவரின் கணக்கை முடக்குவதற்கும் வங்கி உரிமையினைக் கொண்டுள்ளது என்பதுடன் கணக்கு மூடப்பட்டாலன்றி தொடர்புடைய தொகைகளை மீளெடுப்பதற்கு கணக்கு வைத்திருப்பவர் உரித்தினைக் கொண்டிருக்கமாட்டார். அத்தகைய குறைந்தபட்ச முடக்கப்பட்ட தொகைகளுடன் தொடர்ந்து பேணப்படுகின்ற அத்துடன் மூன்று (03) மாத காலப்பகுதிக்கு செயற்படாமல் இருக்கின்ற அத்தகைய அனைத்துக் கணக்குகளையும் கணக்கு வைத்திருப்பவரின் இறுதியாக பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு அத்தகைய மூடுதல் பற்றிய ஏழு நாள் எழுத்திலான அறிவித்தலை வழங்கியதன் பின்னர் மூடுவதற்கான உரிமையினையும வங்கி கொண்டிருக்கும். அத்தகைய சந்தர்ப்பங்களில் ஏழு (07) நாட்கள் எழுத்திலான அறிவித்தல் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர்

கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெறவில்லையாயின், கட்டணங்களாக கணக்கிலுள்ள மீதியினை எடுப்பதற்கான உரிமையினையும் வங்கி கொண்டிருக்கும்.

30. சட்டத்தினால், அரசாங்க ஒழுங்குவிதிகளால் அல்லது இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்களால் அத்தகைய திருத்தங்கள் அவசியப்படுத்தப்பட்டிருப்பின் இந்நியதிகளும் நிபந்தனைகளும், தன்னிச்சையாக திருத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

31. சேமிப்புக் கணக்கினை ஆரம்பித்து அல்லது தொடர்கின்ற எவரேனும் ஆள், சேமிப்புக் கணக்கொன்றின் நடத்தையினை ஆளுகின்ற வங்கியின் நியதிகளை மற்றும் நிபந்தனைகளை வாசித்து, அறிந்துகொண்டார் என்றும் அவற்றின் மூலம் பிணைக்கப்படுவார் என்றும் கருதப்படுதல் வேண்டும். 27 ஆம் வாசகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்குட்பட்டு, எந்நேரத்திலும் இந்நியதிகளை அல்லது நிபந்தனைகளை வேறுபடுத்துவதற்கு, திருத்தியமைப்பதற்கு அல்லது ஏதேனும் சேர்ப்பதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

32. வாடிக்கையாளருடன் தொடர்புடைய கணக்குத் தகவல்கள் உள்ளடங்கலாக அனைத்துத் தரவுகளும், ஊடுகடத்தப்படலாம் அத்துடன்/அல்லது ஏதேனும் அமைவிடத்தில் சேமிக்கப்படலாம் அல்லது வைத்திருக்கப்படலாம் அத்துடன் நிருவாகம் மற்றும் உள்ளகக் கண்காணித்தல் தேவைப்பாடுகள் உள்ளடங்கலாக ஏதேனும் நோக்கத்திற்காக அத்தகைய ஊடுகடத்தல், சேமித்தல் அத்துடன்/அல்லது அணுகுதல் அவசியமானது என அவர்கள் அபிப்ராயப்படுகின்றவிடத்து, கணக்கு பற்றிய வங்கிக் கூற்றுகளை அச்சிட்டு அஞ்சல் செய்வதற்காக அல்லது ஏதேனும் அதனையொத்த சேவைகளை வழங்குவதற்காக வங்கியின், அதன் தலைமை அலுவலகத்தின், கிளை அலுவலகங்களின் அதிகாரமளிக்கப்பட்ட ஆளணியினால் அல்லது வழங்கப்படும் ஏதேனும் தரவு செயன்முறைப்படுத்தல் சேவையில் அல்லது வங்கியினால் ஈடுபடுத்தப்படுகின்ற எவரேனும் ஆளினால் அணுகப்படலாம் என்பதுடன் வாடிக்கையாளர் உடன்பட்டு ஏற்றுக்கொள்கின்றார்.

33. வங்கியானது பணம் துய்தாக்குதலை, பயங்கரவாதிகளுக்கு நிதியளித்தலை தடுத்தல் அத்துடன் எவையேனும் தடைகளுக்குட்படக் கூடிய எவரேனும் ஆட்களுக்கு, நிறுவனங்களுக்கு நிதியியல் மற்றும் வேறு சேவைகளை வழங்குதலுடன் தொடர்புடைய வங்கிக்கு ஏற்புடையதாகவுள்ள சட்டங்களுக்கு அமைவாக செயற்படுவதற்கு வேண்டப்பட்டுள்ளது. ஆகையினால் வங்கியானது அதன் ஏக அத்துடன் முழுமையான தற்றுணிபில் அத்தகைய சட்டங்களுக்கு மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக செயற்படுவது இயைபானது எனக் கருதுகின்ற ஏதேனும் நடவடிக்கைக்கு உரித்துடையதாகவிருக்கும்.

வங்கியானது

(i) நியதிகளின் மற்றும் நிபந்தனைகளின் கீழ் ஏதேனும் அதன் கடமைகளை செயலாற்றுவதில் வங்கி மூலமான ஏதேனும் தாமத்திலிருந்து அல்லது செய்யாதுவிடலில் இருந்து அல்லது அத்தகைய விதிகளுக்கு ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக செயலாற்றுவது இயைபானது என வங்கி கருதுகின்ற ஏதேனும் நடவடிக்கைகளினால் முழுமையாக அல்லது பகுதியளவில் ஏற்பட்ட வேறு கடப்பாடுகளிலிருந்து,

அல்லது

(ii) இவ்வாசகத்தின் கீழ் வங்கியின் ஏதேனும் உரிமைகளை நடைமுறைப் படுத்துவதில் இருந்து,

தோன்றுகின்ற நட்டங்களுக்கு (நேரடியான அல்லது முக்கிய விடயங்களைக் கொண்டதாக அத்துடன் இலாபம் அல்லது வட்டி

இழப்பு உள்ளடங்கலாக ஆனால் எதுவாக இருப்பினும் அவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது) அல்லது சேதங்களுக்கு பொறுப்புடையதாகாது.

ஏதேனும் ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் மேலோங்கிய தேவைப்பாடுகளுக்கு உட்பட்டு, வங்கியானது அத்தகைய சூழ்நிலை காணப்படுவது பற்றி நடைமுறைச் சாத்தியமானளவு விரைவாக வாடிக்கையாளருக்கு அறிவிப்பதற்கு முயற்சியினை மேற்கொள்ளும்.

34. ஏதேனும் கணக்கிற்கு மேற்கொள்ளப்படுகின்ற பிழையான பதிவுகள், அடுத்துவருகின்ற காலமுறையான நிலுவைக் கூற்றினை வழங்குவதற்கு அல்லது சேமிப்பு புத்தகத்தை இற்றைப்படுத்துவதற்கு முன்னரோ அல்லது வழங்குவதற்குப் பின்னரோ பற்றுவைத்தல் பதிவின் ஊடாக (மீளத்திரும்பல் பதிவு) மீளத்திருப்பப்படலாம், சரிசெய்யப்படலாம் அல்லது இரத்துச்செய்யப்படலாம். வட்டிக் கணிப்பீடு (அல்லது ஏனைய ஆதாயம்) தொடர்பில் வங்கி, பிழையான பதிவு மேற்கொள்ளப்பட்ட தினத்தன்றுள்ளவாறு பதிவுகளை பின்னோக்கிச் செயற்படுத்தும்.

35. இதில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் மேலதிகமாக, கணக்கு வைத்திருப்பவர், கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்கு முன்னர் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் வழங்கப்படும் வங்கியின் பொதுவான தொழில் நிபந்தனைகளில் கூட்டிணைக்கப்பட்ட நியதிகளுக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவற்றினால் பிணைக்கப்படுதலும் வேண்டும். அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பொதுவான நிபந்தனைகளில் கூட்டிணைக்கப்பட்டுள்ளதா அல்லது கூட்டிணைக்கப்படவில்லையா என்பதனை பொருட்படுத்தாது இதில் உள்ளடக்கப்பட்ட அனைத்து நியதிகளினாலும் நிபந்தனைகளினாலும் கணக்கு வைத்திருப்பவர் முழுவதுமாகவும் சமமாகவும் பிணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

36. பொதுவான நிபந்தனைகளையும் அத்துடன் வங்கியுடனான எனது உடன்படிக்கையின் நியதிகளையும் நிபந்தனைகளையும் தோற்றுவிக்கும் இவ்விசேட நிபந்தனைகளையும் நான் வாசித்துப் புரிந்துகொண்டேன் என்றும் கவத்தில் எடுத்துள்ளேன் என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

வாடிக்கையாளரின் கையொப்பம்